செ.வெ.எண் : நாள் : 14.09.16

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில்
ரூ.44 லட்சத்து 68 ஆயிரத்து 709 மதிப்பிலான இரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையத்தை
மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.

----

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.44 லட்சத்து 68 ஆயிரத்து 709 மதிப்பிலான இரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்.இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.09.16) திறந்து வைத்து தெரிவித்ததாவது :-

பிற மாவட்டங்களில் உள்ள மருத்துவக்கல்லூரிகளுக்கு இணையாக விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியால் இன்று (14.09.16) விருதுநகர் மாவட்டத்தில் உள்ள அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.44 லட்சத்து 68 ஆயிரத்து 709 மதிப்பிலான இரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்களுக்கு இரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையம் பெரிய வரப்பிரசாதமாக திகழும். இந்த ரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையத்தில் இரத்தத்தில் இருந்து இரத்த அணுக்களாகிய சிவப்பணுக்கள் (Packed RED Cells), தட்டணுக்கள் (Platelets) மற்றும் ஊநீர் (Plasma) ஆகியவைகளை பிரித்தெடுக்கும் இயந்திரங்கள் மற்றும் பிரித்தெடுத்த சிவப்பணுக்கள் (Packed RED Cells), தட்டணுக்கள் (Platelets) மற்றும் ஊநீர் (Plasma)-ஐ உரிய குளிர்நிலையில் சேமித்து வைப்பதற்கான இயந்திரங்களும் உள்ளன.

விருதுநகர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் மூலம் இரத்த கொடையாளர்களிடமிருந்து இரத்தம் சேமிப்பதற்கான சிறப்பு முகாம் கல்லூரிகள், நற்பணிமன்றங்கள், சேவாசங்கங்கள் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு அதன் மூலம் வருடத்திற்கு சுமார் 3500 அலகுகள் (Units) சேகரித்து இரத்த வங்கியில் சேமித்து வைக்கப்படுகிறது. அவ்வாறு சேமித்து வைக்கப்பட்ட இரத்தத்திலிருந்து இரத்த அணுக்களாகிய சிவப்பணுக்கள் (Packed RED Cells ), தட்டணுக்கள் (Platelets) மற்றும் ஊநீர் (Plasma) ஆகியவைகள் பிரித்தெடுக்கப்பட்டு உரிய குளிர் நிலையில் சேமிக்கப்பட்டு தேவை ஏற்படும் தருணங்களில் பயன்படுத்தப்படும்.

மிகுந்த இரத்த சோகை, இருதய நோயுடன் கூடிய இரத்த சோகை, சிறுநீரக கோளாறுடன் கூடிய இரத்த சோகை, எழும்பு மஜ்ஜை நோய்கள் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்டு சிவப்பணுக்கள் குறைபாடு உள்ளவர்களுக்கு சிவப்பணுக்கள் அவர்களது உடலில் செலுத்தப்படும். டெங்கு காய்ச்சல், எலிக்காய்ச்சல், எலும்பு மஜ்ஜை நோய்கள், பர்ப்பியுரா என்ற தட்டணுக்கள் குறைபாடு உள்ளவர்களுக்கு தட்டணுக்கள் அவர்களது உடலில் செலுத்தப்படும். ஹீமோபிலியா குழந்தைகளுக்கு ஏற்படும் இரத்த கசிவு நோய், பரவிய இரத்த குழாயினுள் இரத்த உறைவு நோய், பிரசவத்தின் போது ஏற்படும் மிகுந்த இரத்த கசிவு நோய், மிகுந்த தீக்காயத்தினால் ஏற்படும் ஊநீர் இழப்பு ஆகிய நோய்களினால் பாதிக்கப்பட்டு ஊநீர் குறைபாடு உள்ளவர்களுக்கு ஊநீர் உடலில் செலுத்தப்படும்.

இரத்த வங்கி, இரத்த பகுப்புகள் பிரித்தெடுத்தபிறகு சிவப்பணுக்கள் 30 நாட்கள் வரையும், தட்டணுக்கள் 5 முதல் 7 நாட்கள் வரையும், ஊநீர் ஓராண்டுகள் வரையும் சேமித்து வைத்து பயன்படுத்த முடியும். பிற மாவட்டங்களை சார்ந்திருந்த நிலை மாறி இன்று விருதுநகர் மாவட்டத்தில் அரசு தலைமை மருத்துவமனையில் இரத்த வங்கி - இரத்த பகுப்புகள் பிரித்தெடுக்கும் மையம் நிறுவப்பட்டு தனியார் மருத்துவமனைகளிலிருந்தும் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, பகுப்பு செய்யப்பட்ட இரத்தம் (சிவப்பணுக்கள் (Packed RED Cells ), தட்டணுக்கள் (Platelets) மற்றும் ஊநீர் (Plasma) பொது மக்கள் பயன்பெறும் விதமாக பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்கள்.

முன்னதாக இரத்தம் சேகரிக்கும் அறை, இரத்த தானம் கொடுப்போர் தங்கும் இடம், மருத்துவ பரிசோதனை அறை, ஆய்வுக்கூடம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு அவற்றின் பயன்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்கள்.

இந்நிகழ்வின் போது இணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) (பொ) மரு.துரைராஜ், கண்காணிப்பாளர் (பொ) மரு.வடிவேல், இரத்த வங்கி மருத்துவர் மரு.சக்திவேல், நிலைய மருத்துவ அலுவலர் மரு.அரவிந்த்பாபு, மருத்துவ ஆய்வாளர் திரு.ஹபீப்முகமது உட்பட மருத்துவர்கள் செவிலியர்கள், அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்**